தமிழ்நாடு அரசு

சுருக்கம்

பள்ளிக்கல்வி - சமச்சீர் கல்வி - 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அறிவியல் பாட தேர்ச்சிக்கு குறைந்த பட்ச மதிப்பெண்கள் நிர்ணயம் செய்தல் மற்றும் தனித்தேர்வர்களுக்கான செய்முறை வகுப்பு/தேர்வு பள்ளிகளில் நடைமுறைப்படுத்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி (க்யு) துறை

அரசாணை (நிலை) எண்.190 நாள் : 29.11.2011

திருவள்ளுவர் ஆண்டு 2042

கார்த்திகை 13

படிக்கவும் :-

1. அரசாணை (நிலை) எண்.21, பள்ளிக்கல்வித்(க்யு) துறை, நாள் : 01.02.2010
2. அராசணை (நிலை) எண்.144, பள்ளிக்கல்வித்(க்யு) துறை,நாள் : 20.09.2011
3. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 83375/ஐ2/11,நாள் : 21.11.2011.

ஆணை :-

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாட்டில் அரசின்கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளில் சமச்சீர் கல்வித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, 10-ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அறிவியல் பாடத்தில் செய்முறைகள் செய்யவும், அதில் அறிவியல் பாட மொத்த மதிப்பெண்களில் கருத்தியல் தேர்விற்கு 75 மதிப்பெண்களும், செய்முறைத்தேர்விற்கு 25 மதிப்பெண்களும் நிர்ணயம் செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 10-ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அறிவியல் செய்முறைத்தேர்விற்கான 25 மதிப்பெண்களில் 20 மதிப்பெண்கள் தேர்விற்கும், 5 மதிப்பெண்கள் அகத்தேர்விற்கும் மற்றும் மாற்றுத் திறனாளி, தனித்தேர்வர்கள் செய்முறை செய்யவும் அதற்கான வழிமுறைகள் அனுமதித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், பள்ளிக்கல்வி இயக்குநர், 18.11.2011 அன்று நடைபெற்ற மாநில பொதுப்பள்ளி கல்வி வாரியத்தின் கூட்டத்தில் 10-ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அறிவியல் பாடத்தில் வழங்கப்பட்டுள்ள மதிப்பெண்களில் தேர்ச்சி பெற குறைந்தபட்ச மதிப்பெண்களாக கருத்தியல் தேர்வில் 75 மதிப்பெண்களில் 20 மதிப்பெண்களும் மற்றும் செய்முறைத்தேர்வில் 25 மதிப்பெண்களில் 15 மதிப்பெண்களும் நிர்ணயம் செய்து அரசின் ஆணை பெற ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது எனவும், மேலும், தனித்தேர்வர்களுக்கும் 10-ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அறிவியல் பாடத்தில் செய்முறைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் தேர்வு எழுதும் தனிப்படிப்பு மாணவர்கள் அவர்கள் சம்மந்தப்பட்ட மாவட்ட கல்வி அலுவலகத்தில் உரிய விண்ணப்பதில் பூர்த்தி செய்து தங்களது பெயரினை பதிவு செய்து கொள்ள வேண்டும் எனவும், மாவட்ட கல்வி அலுவலரால் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப செய்முறை பயிற்சிக்காக நிர்ணயம் செய்யப்பட்ட பள்ளிகளில் சனிக்கிழமை மற்றும் விடுமுறை நாட்களில் உரிய செய்முறைகளை செய்திட வேண்டும் என்றும் அவ்வாறு செய்முறை பயிற்சியினை

தனித்தேர்வர்களுக்கு அளித்திடும் அறிவியல் ஆசிரியர்கள், ஆய்வக உதவியாளர்கள் அலுவலக உதவியாளர்கள், எழுத்தர்களுக்கு மதிப்பூதியம் மற்றும் ஆய்வக பொருட்கள் செலவினங்களை மேற்கொள்ள தனித்தேர்வர்களுக்கு செய்முறை பயிற்சி அளிக்கும் கட்டணமாக நபர் ஒன்றுக்கு ரூ.125/- (ரூபாய் நூற்று இருபத்தைந்து மட்டும்) செலுத்தப்படவேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டு அரசிடம் அனுமதி பெற தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில், தனிப்படிப்பு மாணவர்களிடமிருந்து பெறப்படும் கட்டணம் சம்மந்தப்பட்ட மாவட்ட கல்வி அலுவலரின் பெயரில் வரைவோலையாகப் பெறப்படவேண்டும் எனவும், வரைவோலையாகப் பெறப்பட்ட தொகையினை மாவட்டக் கல்வி அலுவலர்கள் கணக்கில் வைத்திடவும், மேற்படி உரிய தொகையினை தனிப்படிப்பு மாணவர்களுக்காக செய்முறை வகுப்பு நடைபெற நிர்ணயிக்கப்பட்ட பள்ளியின் தலைமையாசிரியரின் பதவிபெயரில் செய்முறை வகுப்புச் செலவினங்களை மேற்கொள்ள ஒரே வங்கி வரைவாகப் பெற்று வழங்கிடும் நடைமுறையைப் பின்பற்றலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். பள்ளிக் கல்வி இயக்குநர் மேலும், 10ஆம் வகுப்புத் தனித்தேர்வர்களுக்கு அறிவியல் செய்முறை வகுப்புகளுக்கான கட்டணம் நிர்ணயித்தல் குறித்து கீழ்க்கண்ட விவரங்களையும் தெரிவித்துள்ளார்.-

| | |
|---|---|
| 4 அறிவியல் ஆசிரியர்கள் மதிப்பூதியம் நாளொன்றுக்கு ரூ.100/- வீதம் 5 நாட்கள் (இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல்) | ரூ.2000 |
| 4 ஆய்வக உதவியாளர்கள் மதிப்பூதியம் நாளொன்றுக்கு ரூ.75/-வீதம் 5 நாட்கள் | ரூ.1500 |
| 2 அலுவலக உதவியாளர்கள் மதிப்பூதியம் நாளொன்றுக்கு ரூ.50/- வீதம் 5 நாட்கள் | ரூ.500 |
| ஆய்வக பொருட்கள் செலவின'கள் ரூ.1200/-வீதம் 5 செய்முறை நாட்கள் | ரூ.6000 |
| மொத்தம் | ரூ.10000 |

நாளொன்றுக்கு 80 மாணவர்கள் வீதம் 5 நாட்களுக்குச் செய்முறைகள் செய்வதற்கான தோராய செலவினம் (10000/80) ரூ.125/-

4. இந்நிலையில், மாநில பொதுப்பள்ளி கல்வி வாரியத்தால் தீர்மானிக்கப்பட்ட 10-ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அறிவியல் பாடத்திற்கான தேர்ச்சிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் கருத்தியல் தேர்வில் 75 மதிப்பெண்களில் 20 மதிப்பெண்களும் மற்றும் செய்முறைத்தேர்வில் 25 மதிப்பெண்களில் 15 மதிப்பெண்களும் நிர்ணயம் செய்வதற்கும், மேலும் தனித்தேர்வர்களுக்கு செய்முறை பயிற்சி அளித்திட குறிப்பிடப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கான கட்டண நிர்ணயத்திற்கும் அரசின் ஆணையினை பள்ளிக்கல்வி இயக்குநர் வேண்டியுள்ளார்.

5. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்கலாம் என முடிவு செய்து அவ்வாறே 10-ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அறிவியல் பாடத்திற்கான தேர்ச்சிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் கருத்தியல் தேர்வில் 75 மதிப்பெண்களில் 20 மதிப்பெண்களும் மற்றும் செய்முறைத்தேர்வில் 25 மதிப்பெண்களில் 15 மதிப்பெண்களும் என நிர்ணயம் செய்யலாம் எனவும், மேலும், 10-ஆம் வகுப்பு தனித் தேர்வர்களுக்கு அறிவியல் செய்முறை வகுப்புகளுக்காக ஆசிரியர்கள் மற்றும் இதர அலுவலர்களுக்கு கட்டணம் நிர்ணயிப்பது தொடர்பாக, அரசுக்கு கூடுதல் செலவினம் ஏதும் ஏற்படக்கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் அதனை ஏற்றும், அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி-5ல் ஆணையிட்டுள்ளவாறு, சமச்சீர் பாடத்திட்டத்தின்படி 10-ஆம் வகுப்பிற்கான பொதுத் தேர்வில் அறிவியல் பாடத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தேர்ச்சி மதிப்பெண்கள் மற்றும் தனித் தேர்வர்கள் செயல்முறை தேர்வு முறையினை நடைமுறைப்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பள்ளிக்கல்வி இயக்குநர், மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர், மற்றும் அரசு தேர்வுகள் இயக்குநர் ஆகியோர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

(ஆளுநரின் ஆணைப்படி)

தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,
அரசு கூடுதல் தலைமை செயலாளர்

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர்,
சென்னை-6
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை - 6.
அரசு தேர்வுகள் இயக்குநர், சென்னை - 6.
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர்,
சென்னை-6
மாநில திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வி இயக்கம்,சென்னை-6
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் கழகம், சென்னை-6

நகல்:
மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அலுவலகம்,
சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
பள்ளிக்கல்வித்(வ.செ)மற்றும் (வி1) துறை, சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

அரசுத் தேர்வுகள் இயக்குநர் அலுவலகம்
சென்னை - 600 006

ந.க.எண் .031425/பி1/2011 நாள் : 05.12.2011

நகல் தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.

நேர்முக உதவி அலுவலர் (இடைநிலை)

பெறுநர்

1. அனைத்து மாவட்ட/முதன்மைக்கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மெட்ரிக்/ஆங்கிலோ-இந்தியன் பள்ளி ஆய்வாளர்கள்
3. அனைத்து அரசுத் தேர்வுகள் மண்டலத்துணை இயக்குநர்கள்
4. அனைத்து பிரிவுகள் (அலுவலகம்)
5. அனைத்து அலுவலர்கள் (அலுவலகம்)